*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07042026

# Marriage Rituals Indicated in Sangam Literature

**Dr. R. Babithra*,**
[1]Assistant Professor, Department of Tamil Studies, Holy Cross College (Autonomous)
Tiruchirappalli – 620002
*Correspondence: rohithbabithra@gmail.com

**Article Info**
Received on 21-Mar-2026, Revised on 27-Mar-2026, Accepted on 27-Mar-2026, Published on 01-April-2026

## ABSTRACT

Life in wedlock (Karpu) is the natural progression of a clandestine relationship (Kalavu). A secret love affair does not attain excellence unless it culminates in a formal marriage. Therefore, Tamil scholars emphasized the importance of the marriage ceremony. The concept of "chastity" (Karpu) as defined within the context of a clandestine relationship refers to the collective group of four great feminine virtues: Achcham (fear/shyness), Madam (innocence/simplicity), Naanam (modesty), and Payirppu (aversion to the unfamiliar). However, the "Karpu" mentioned in the grammar of marital life (Karpiyal) is different.The former is an innate quality that appears naturally in women; it is an attribute shared by the heroine, her friend (Thozhi), the foster mother (Sevili), and the biological mother (Nattray). The latter is not a mere personality trait, but a formal event conducted by elders for the couple. This is explained by the grammatical verse: "Karpu is defined as the act of a groom, eligible by tradition, accepting a bride through formal rituals (Karanam) when given away by those authorized to do so." From this, we can understand that in this context, Karpu is not cited as an internal quality but as a formal union. It further clarifies that while the "faultless vision of Karpu" mentioned in secret love (Kalavu) refers to a character trait, in this context, it refers specifically to the ceremonial event of marriage.

***KEYWORDS:*** *Sangam Literature, Marriage Rituals, Tamil Culture, Kalavu, Karpu, Classical Tamil Literature, Marriage Traditions, Feminine Virtues, Ancient Tamil Customs.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

# சங்கஇலக்கியங்கள் சுட்டும் திருமணச் சடங்குகள்

**முனைவர் இரா.பபித்ரா**, உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,

புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

**ஆய்வுச்சுருக்கம்**

களவொழுக்கத்தின் தொடர்ச்சியாக வருவது கற்பொழுக்கமாகும். களவு என்பது கற்பில் முடியாவிட்டால் சிறப்புறாது. ஆதலால் தமிழ்ச்; சான்றோர் திருமணத்தை வலியுறுத்தினர். களவொழுக்கத்தில் பெண்பாலருக்கென்று வரையறுக்கப்பட்ட அச்சம்இ மடம். நாணம். பயிர்ப்பு எனச் சுட்டப்படும் நான்கு பெருங்குணங்களின் தொகுதியான கற்பு என்பது வேறு. கற்பியலில் சுட்டப்பெறும் கற்பு என்பது வேறு. முன்னது மகளிரோடு உடன் தோன்றி அவர்களிடம் இயற்கையாக அமைந்த ஒருவகைப் பண்பாகும். இது தலைவி. தோழிஇ செவிலி. நற்றாய் என்னும் நால்வருக்குமே உரியது. பின்னது பண்பு அன்று. தலைமக்கள் இருவரிடையே நிகழும் இவர்களுக்குப் பெரியோர்களால் நிகழ்த்தி வைக்கப்படும் ஒரு நிகழ்வாகும். இது

**கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே**

என்னும் நூற்பாவால் விளங்கும். இங்கு கற்பு ஒரு பண்பாகச் சுட்டப்படாததை உணரலாம். களவில் கூறப்படும் 'செயிர்தீர் காட்சிக் கற்பு' என்பது நிகழ்வாகாது பண்பாதலையும் அறியலாம்.

**ஆய்வின் தேவை**

ஓர் ஆணும் பெண்ணும் இல்லற வாழ்வில் இணைவதற்கு திருமணம் எனப்படும் வதுவைச் சடங்கு மிக இன்றியமையாததாகும் என்பதை எடுத்துரைப்பதே இவ்ஆய்வின் தேவையாகும்

**கருதுகோள்**

கரணமாவது வதுவை என்னும் மணச்சடங்காகும். சடங்கின்றித் தலைமகனும் தலைமகளும் இணைந்து கற்பு வாழ்க்கை மேற்கொள்ளக் கூடாது. அஃது ஒழுக்கக் குறைபாடாகும். கொடுப்பது கொள்வது இல்லாத உடன்போக்கின் போதும் கரண நிகழ்வு மிகவும் இன்றியமையாததாகும் என்பதை எடுத்துரைப்பதே; கருதுகோளாகும்

**ஆய்வுமுறை**

இவ்ஆய்வானது விளக்கமுறைத் திறனாய்வு முறையினைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது.

**முன்னுரை**

கற்பில் கூறும் கற்பாகிய நிகழ்வில் கொடுப்பது கொள்வது கரணம் என்னும் மூன்று செயல்கள் இடம்பெறுகின்றன. தலைவியைக் கொள்ளும் உரிமை உடையவன் தலைவனாவான். அவனை அவனுக்குக் கொடுக்கும் உரிமையுடையோர் தலைமகளின் தந்தை தாயர் தாயொடு பிறந்தார். தமையன்மார். தாயத்தார்இ ஆசான் ஆகியோராவார். அங்கனம் கொடுக்கும் போது வதுவை என்னும் மணச்சடங்கினை நிகழ்த்திக் கொடுப்பர். இச்சடங்கு தீ முன்னர் நிகழ்த்தப்படும். அப்போது தலைவனிடம் இவளை நீ இன்னவாறு பாதுகாக்க வேண்டும் என்றும் தலைவியிடம் இவனுக்கு இன்னவாறு நீ ஏவல் செய்து ஒழுக வேண்டும் என்றும் கூறி நெருப்புக் கடவுள் சாட்சியாக மந்திரம் சொல்லிச் சடங்கினைச் செய்வர்.

**வதுவைச் சடங்கு**

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

கற்பு வாழ்க்கை மேற்கொள்வதற்கு கரண நிகழ்வு மிக இன்றியமையாததாகும். சடங்கு செய்யாத மன நிகழ்வு சங்க காலத்தில் புறக்கணிக்கப்பட்டது. கொடுக்கும் உரிமையுடையோர் இல்லாத உடன்போக்கு நிகழ்வு என்றாலும் கூடக் கரணம் அவசியம் செய்ய வேண்டும்.[1] அப்போது கொடுப்பவர் இடத்தில் வேள்வி செய்பவன் இருந்து தலைவியைத் தலைவனுக்குத் தருவான்

**களவின் கண் ஒத்தார் இருவர் வேட்கை மிகுதியால் கூடி ஒழுகிய. வழிக் கரணத்தின் அமையாது இல்லறம் நடத்தலாமா எனின்இ அஃது ஆகாது என்றற்குக் 'கரணமோடு புணர' என்றார்.[2]**

என இளம்பூரணர். சடங்கின் இன்றியமையாமையை வலியுறுத்துவார். மேலும் அவர்இ கரணம் புரியாது மனைவாழ்க்கையில் ஈடுபடுவதை ஒழுக்க் குறைபாடாக கருதுவர்.[3]

**பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு**
**தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய**
**நாலூர்க் கோசர் நன்மொழி போல**
**வாயா கின்றே தோழி ஆய்கழற்**
**சேயிலை வெள்வேல் விடலையொடு**
**தொகுவளை முன்கை மடந்தை நட்பே[4]**

என்னும் பாடல் கொடுப்பவர் இல்லாமல் கரணம் நிகழ்ந்தமைக்கான சான்றாகும்.

இதனுள் பறை கொட்டுதல், சங்கு ஊதுதல் முதலான சடங்குகள் சூட்டப்பட்டன 'உழுந்துதலைப் பெய்த'[5] எனத் தொடங்கும் அகநானூற்று பாடலின் முதல் இருபது அடிகளில் கரணம் புணர்த்தல், பேரிளம் பெண்டிர் வாழ்த்தல், தலைவியை தமர் தரல், தலைவன் கொள்ளுதல் ஆகிய கற்பு நிகழ்ச்சிகள் நிரலே முறைப்படக் காட்டப்படுகின்றன. தலைமகள் களவு நெறியினை கைவிட்டுக் கற்பு நெறிக்கு சென்றதை விவரிக்கும் ஒரே ஓர் அக இலக்கியச் சான்றாக இப்பாடல் அமைகிறது 'மைப்புறப் புழுக்கின்'[6] எனத் தொடங்கும் அகப்பாட்டையும் களவினின்று கற்பிற்கு செல்வதற்கான சான்று மேற்கோளாகக் கொள்வதுண்டு.[7]

**பொய்யும் வழுவும்.**

ஆதியில் கரணம் என்னும் வதுவே சடங்கு இல்லாமலே தலைமக்கள் களவின் முடிவில் மணம்புரிந்து இல்லறம் நடத்தினர். பிற்காலத்தில் களவு நெறியில் ஆண்பாலரிடையே சில ஒழுக்க பிறழ்வுகள் புகுந்தன ஒருவன் ஒருத்தியிடம் நெடுங்காலம் மறைவாகப் பழகிவிட்ட பழக்கம் வெளிப்பட்ட பின்பு 'நான் இவளை அறியமாட்டேன் என்ற முறையில் ஆடவர் சிலர் பொய் கூறலாயினர். இங்ஙனம் ஒரு ஆண்மகன் ஒரு பெண்மகனின் நலத்தை நுகர்ந்துவிட்டுப் பிறகு அவளைத்தான் அறிந்திலனாகப் பொய் பகர்ந்தது பற்றி ஓரகப் பாடல் கூறுகிறது.[8] அவ்வாறே ஒருத்தியிடம் தொடர்பு வைத்து அதனை மறைத்து அவளுக்கு தெரியாமல் வேறொத்தியை மணந்து முதலாமவளைப் புறக்கணித்து அறத்தினின்று வழிவினர் இத்தகு பொய்யும் வழுவுமாகிய ஒழுக்கக் குறைபாடுகள் தோன்றியமையால் தான் இவற்றைத் தடுக்கும் முகமாக சான்றோர்கள் கரண

நிகழ்ச்சியை வகுத்தனர் என்று தொல்காப்பியம் கூறுகின்றது.[9]

பெரியோர்கள் முன்னிலையில் தீக்கடவுள் சாட்சியாக கரணம் முடிக்கும்போது பொய்யும் வழுவும் புரிவதற்கு ஆடவர் அஞ்சுவர். கரணம் என்னும் கட்டுப்பாடு பொய்யும் வழுவும் புகாத மகளிருடைய நன்மையைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது. இதனால் பெண்பாலருக்குத் தரப்பட்ட முதன்மை விளங்கும். அக்காலத் திருமண மரபில் தொடக்கத்தில் ஒரே வகையான சடங்கும் பின்பு ஒன்றுக்கு மேற்பட்ட வேறுவேறு வகையான சடங்குகளும் இருந்தன என்று கூறுவர், நா.சுப்பிரமணியன்[10] மொத்தம் பத்து வகையான மணவினை முறைகள் சங்ககாலத்தில் நிலவினவாக ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்[11] கரண நிகழ்வுகளில் மகளிர்தம் பங்கு மிகுதி என்பர் க.திலகவதி.[12]

**கற்பின் பொதுமை**

பெண்ணோடு உடன்பிறந்த குணமாகிய கற்புப்பண்பின் வேறாகிய கற்பியல் கூறும் கற்பு என்பது ஒரு தொழிலாகும். கற்றல் என்னும். தன்வினையின் பிறவினை கற்பித்தலாகும். கற்பித்தலால் கற்பு என பெயர் பெற்றது.[13] இங்குச் சொல்லப்படும் கற்புத் தலைவிக்கு உரித்தானது போன்று தலைவனுக்கும் உரியதாகும் கற்பாகிய பண்பு தலைவிக்கு மட்டுமே உரியது. ஆனால் கற்பாகிய தொழில் தலைமக்கள் இருவருக்கும் பொதுவாகும். தலைமகளுக்குக் கற்பிப்போர் அவளது தாய் தந்தையரும் தலைவனுமாவர். பெற்றோர், 'கணவனைக் காட்டிலும் சிறந்த தெய்வம் வேறு இல்லை, அவனை இன்னின்னவாறு அன்பு செய்ய வேண்டும் என கற்பிப்பர். தலைவன், அந்தணர், சான்றோர், தேவர் ஆகியோரிடத்து தலைவி நடந்து கொள்ளும் முறைமை பற்றிக் கற்பிப்பான். நூலிலும் கரணத்திலும் சொல்லப்பட்ட சிறப்பிலக்கணங்களைத் தனக்குத் தானே கற்பித்துக் கொண்டு துறவறத்தை மேற்கொள்ளும் வரை இல்லறம் நிகழ்த்துவது தலைவனுக்குக் கற்பாகும். இங்ஙனம் கற்புத்தொழில் தலைமக்கள் இருவருக்கும் உரித்தாயினும், கற்பொழுக்க நிலையில் இது பெரும்பான்மை தலைவி மேலதாக அமைகிறது.

**சிலம்புகழி நோன்பு**

மகளிர் மங்கலத்திற்கு அடையாளமாக கூந்தலில் மலர் சூட்டிக் கொள்வது போன்று கால்களில் சிலம்புகள் அணிவது சங்ககாலத்து வழக்கமாகும். சிலம்பணிதல் கன்னி மகளிருக்கும் திருமணமான மகளிருக்கும் பொதுவாகும். ஒரு பெண் களவு நெறியினின்று கற்புநெறிக்குச் செல்லும்போது, அவள் தன் பாதங்களில் அணிந்த பழைய சிலம்புகள் நீக்கப்படும், புதிய சிலம்புகள் அணிவிக்கப்படும். இதனை ஒரு சடங்காக அந்நாளில் செய்தனர். தொல்காப்பிய உரைக்குறிப்புகளால் இது 'சிலம்புகழி நோன்பு' என்று வழங்கப்பட்டதாகத் தெரிய வருகிறது அகப்பாடல்களில் இது பற்றிய செய்திகள் காணப்படினும், இந்நோன்பு எவ்வாறு நிகழ்த்தப்பட்டது என்பது புலனாகவில்லை.

சிலம்பு கழித்தல் வதுவைச் சடங்குகளில் முதலாவதாகும். பழைய சிலம்பினை அகற்றுவது பற்றிக் கூறும் பாடல்கள் உள்ளனவேயன்றிப் புதிய சிலம்புகளை அணிவிப்பது பற்றி எந்த ஓர் அகப்பாடல்களிலும் குறிப்பில்லை. எனினும். இதனை உலக வழக்கை நோக்கி உய்த்துணர்வதன்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

வாயிலாக அறியலாம். இக்காலத்தில் மணமான மகளிர், கால் விரல்களில் சிறிய அளவில் மெட்டியணிவது, புதுச்சிலம்புகள் அணியும் பண்டை வழக்கின் எச்சமாகலாம். மேலும், எந்த மங்கல காரியத்தையும் நிகழ்த்தும்போது, பழையவற்றை அகற்றிவிட்டு புதியவற்றை நிலைநாட்டுதல் சங்ககால மக்களின் வழக்கமாகும். பழைய மணலை மாற்றி புதுமணலைப் பரப்புவர். விளக்கு, மாலை முதலியன புதியனவாக அமைக்கப்படும.; இவற்றிற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. இவை மனவிழாவிலும் நிகழும் என்பது ஓர் அகப்பாடலால் தெரிய வருகிறது.[14] சிலம்பு கழித்தலாகிய சடங்கில் பழைய சிலம்புகளை நீக்குதல் மட்டுமே நிகழாது, அவற்றிற்கு மாறாகப் புதிய சிலம்புகள் அணிவிக்கப்படும் என்பது புலனாகும். இதனால் வதுவை முடிந்து கற்பு வாழ்வினை மேற்கொள்ளும் தலைவி, அதற்குப் பிறகும் தொடர்ந்து களவு வாழ்க்கையில் அணிந்தது போன்று சிலம்புகள் அணிந்து விளங்குவாள் என்பது பெறப்படும்.

மணமான மகளிரும் கால்களில் சிலம்புகள் அணிந்து காணப்படுவர் என்பதற்கு கண்ணகி மாணிக்கப்பரல், கோப்பெருந்தேவி முத்துப்பரல் வரலாறுகளே சான்றாகலாம். இங்கனம் சிலம்பு கழித்தலை எதற்காகச் சடங்காக நடத்தினர் என்பது புலப்படவில்லை. பழைய, புதிய சிலம்புகளுக்கிடையில் வடிவம், உள்ளீடு, ஓசை முதலானவற்றில் வேறுபாடு இருந்திருத்தல் வேண்டும் இவ் வேற்றுமையால் கன்னி மகளிரும் மணமான பெண்டிரும் பிரித்து அறியப்பட்டனராகலாம். இக்காலத்தில் தாலியைக் கருத்தில் வைத்து இவ்விருவகை மகளிர் பிரித்து அறிதல் போல, அக்காலத்தில் சிலம்புகளின் வேறுபாட்டினை கொண்டு இவ்வாறு சாராரும் பிரித்தெறியப்பட்டனராதல் வேண்டும். கற்புநெறிப் பெண்டிர் சிலம்பணிவது குறித்ததான இலக்கிய மேற்கோள்கள் பரவலாக கிட்டவில்லை எனினும், இரண்டு அகப்பாடல் செய்திகள் சான்றுகளாகக் கொள்ளத்தக்கானவாய் உள்ளன.

**அரி பெய் சிலம்பின் ஆம்பல் அம் தொடலை,**
**அரம் போழ் அவ் வளைப் பொலிந்த முன்கை,**
**இழை அணி பணைத் தோள்இ ஐயை**[15]

ஐயை என்னும் பெயருடைய பெண் சிலம்பணிந்து திகழ்வதே இப்பாடல் எடுத்துக்காட்டுகிறது. இது புலனெறிச் செய்தி அன்று, வரலாற்றுச் செய்தியாகும். அக இலக்கியங்களில் சுட்டப்படும் வரலாற்றுச் செய்திகளில் இடம் பெறும் மகளிர்னைவரும் மனம் முடித்துக் கற்பு வாழ்க்கையை மேற்கொண்டவர்களாவர். கன்னி மகளிரை வரலாற்றுச் செய்திகளில் கூறுவது மரபில்லை. ஆதிமந்தி, வெள்ளிவீதியார் முதலான பெண்டிரைப் பற்றிய குறிப்புகள் செய்யுட்களில் காணப்படுதல் இவண் கருதத்தக்கது.

**பெருந்தோள் தொய்யில் வரித்தும் சிறுபரட்டு**
**அஞ்செஞ் சீறடிப் பஞ்சி ஊட்டியும்**[16]

என வரும் பாடல் அடிகளில் ‘சிறுபரட்டு’ எனச் சிறிய பரல்கள் கூறப்பட்டமையால் அப்பரல்களை

உள்ளீடாகக் கொண்ட சிலம்பினைத் தலைமகள் காலில் அணிந்தமை பெறப்படும். இது பாலைதிணைப்பாற்ப்பட்ட கற்பு பாட்டாகும். சிலம்பு கழித்தலாகிய சடங்கினை நற்றாயோ அல்லது. தலைவனது தாயோ செய்வர்..

**பெரும்பயர் வழுதி கூடல் அன்னதன்**

**அருங்கடி வியனகர்ச் சிலம்பு. சிலம்புங் கழியாள்**[17]

**ஓரா யாத்த ஒரு தூண் முன்றில்**

**ஏதில் வறுமனைச் சிலம்புடன் கழீஇ**

**மேயினள். கொல்லென நோவல் யானே.**[18]

**தானாமர் துணைவன் ஊக்க ஊங்கி.**

**உள்ளாது கழிந்த முள்ளெயிற்று துவர்வாய்ச்**

**சிறுவன் கண்ணி சிலம்புகழீ,**

**அறியாத் தன் தேளத்தள்ஆகுதல் கொடிதே**[19]

**வெயில் காய் அமையத்து இமைக்கும் அந்தத்து.**

**அதருழந்து அசையின கொல்லோ ததரல் வாய்ச்**

**சிலம்பு கழீஇய செல்வம்**

**பிறருணக் கழிந்த எண் ஆயிழை அடியே.**[20]

**நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினும்.**

**எம்மனை வதுவை நன்மணம் கழிகென**[21]

என்பனவாய் அமைந்த சான்றுகள் இச்சடங்கு வதுவைக்கு முன்பு நிகழ்த்தப்படும் மெய்ம்;மையை உணர்த்தும். இது தன் மனையிடத்து நிகழ்வதையே நற்றாய் விரும்புவாள். இந்நோன்பினைப் பெருமைக்குரிய ஒன்றாக அக்காலத்தார் கருதினர் என்பது இக்குறிப்புகளால் தெரிய வருகிறது. காற்சிலம்புகள் அணியாமை ஒருத்தி திருமணம் ஆனதற்கான அடையாளம் என்பவர் வா.சுப மாணிக்கம்[22] இதனைக் கன்னி கழித்தலுக்கான புறச்சின்னமாக வாழ்வியற் களஞ்சியம் சுட்டும்.[23]

**தலை இரவு**

சிலம்பு கழித்தலாகிய சடங்குகளும் இன்ன பிற வதுவைச் சடங்குகளும் முடிந்த பின்னர்த் தலைவி பலரும் அறியும்வண்ணம் வெளிப்படையாகத் தலைவனுக்கு உரிமையாகிறாள். களவொழுக்கத்தில் பல இரவுகளில் தலைவனோடு கூடி இன்புற்றவள் இப்பொழுது கற்பொழுக்கத்தில் தலை இரவாகிய முதல் இரவினை நேரிடையாக எதிர்கொள்கிறாள். இதனைத் தொல்காப்பியர் ‘நெஞ்சதளை யவிழ்ந்த புணர்ச்சி’[24] என இடக்கரடக்கிக் கூறுவர். (இடக்கர் அடக்கல் - சொல்ல தகுதி இல்லாததை மறைத்து வேறொரு சொற்றொடரால் கூறுதல்) ‘ஓரிற் கூடிய உடன்புணர் கங்குல்’[25] என இவ்விரவுப் புணர்ச்சியைச் சுட்டும் அகநானூறு, தொடர்ந்து தலைவன் செய்கையையும் தலைவியது நிலையையும் சில அடிகளில் விவரிக்கிறது[26] குறைவில்லாத இம்மகிழ்ச்சி இருவருக்கும் பல நாள்கள் தொடர்கிறது. அதன்பின்பு தலைமகள் இல்லறக் கடமைகளை மேற்கொள்ளத் தொடங்குகிறாள்.

**ஆய்வின் முடிவுகள்**

- மகளிர்தம் இயல்பான குணமான கற்பு என்பது வேறுஇ கற்பியலில் கூறப்படும் கற்பாகிய நிகழ்வு வேறுஇ இக்கற்பு ஒரு தொழிலாகும்.
- கற்பாகிய நிகழ்வில் கொடுப்பதுஇ கொள்வது. கரணம் என்னும் மூன்று செயல்கள் இடம்பெறும்
- ஆதியில் சடங்கின்றி நிகழ்ந்த மணவினைஇ பிற்காலத்தில் பொய்யும் வழுவும் தோன்றிய நிலையில் சடங்கோடு கூடியதாயிற்று.
- கற்பாகிய பண்பு தலைவிக்கு மட்டுமே உரியதுஇ கற்பாகிய தொழில் தலைமக்கள் இருவருக்கும் பொதுவாகும்.
- மணவினைக்கு முன்பு பழைய சிலம்புகளை நீக்கித் தலைவிக்குப் புதிய சிலம்புகள் அணிவித்தலாகிய சடங்கு செய்யப்பட்டது.

**சான்றெண் விளக்கம்**

1. கொடுப்போர் இன்றியும் கரண முண்டே
 புணர்ந்துடன் போகிய காலை யான - தொல். பொருள்.கற்பியல், சூத்.எண். 2
2. இளம்பூரணர், தொல்.பொருள்.கற்பியல்; சூத்.எண்.1, உரை
3. மேலது, சூத்.எண்.2, உரை
4. குறுந்தொகை, பா.எ.15.
5. அகநானூறு, பா.எ.86
6. மேலது, பா.எ.136
7. நச்சினார்க்கினியர், தொல், பொருள் கற்பியல். சூத்.எண்.4, உரை
8. "தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
 கரும்பமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்
 திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய
 அறனி லாளன் அறியே னென்ற
 திறனில் வெஞ்சூள் அறிகரி கடாஅய்
 முறியார் பெருங்கிளை செறியப் பற்றி
 நிறுதலைப் பெய்த ஞான்றை" – அகநானூறு பா.எ. 256: 14 – 20
9. "பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
 ஐயர் யாத்தனர் கரணமென்ப" – தொல். பொருள், கற்பியல், சூத்.எண். 4
10. ந.சுப்பிரமணியன், சங்ககால மகளிர் வாழ்வியல், ப.356.
11. க.திலகவதி, சங்ககால மகளிர் வாழ்வியல், ப.126
12. மேலது, ப.127
13. நச்சினார்க்கினியர். தொல்.பொருள், கற்பியல். சூத். எண். 1, உரை.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.12

14. “தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
 மனைவிளக் குறுத்து மாலை தொடரி’ – அகநானூறு, பா. எ. 86:3-4.
15. மேலது, பா.எ.6 : 1- 3
16. மேலது, பா.எ. 389 : 6-7
17. மேலது, பா.எண்.315:7-8
18. மேலது, பா.எ.369: 24-26
19. மேலது, பா.எ.385: 15-18
20.. நற்றிணை பா.எ.279: 8-11
21.. ஐங்குநுறூறு, பா.எ. 399:1-2
22. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.131
23. வாழ்வியற் களஞ்சியம். தொகுதி, ப.36
24. தொல்பொருள் கற்பயில் சூத்.எண். 5:2
25. அகநானூறு, பா.எண். 86:20
26. மேலது, பா.எ.86 : 21- 29

**துணைநூற்பட்டியல்**

[1.] **இளம்பூரணர்.** *தொல்காப்பியம் - பொருளதிகாரம்.* 3-ஆம் பதிப்பு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1999.

[2.] **களஞ்சியம்.** *வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி 9).* தமிழ்ப் பல்கலைக்கழகம், 1988.

[3.] **சாமிநாதையர், உ. வே.** *குறுந்தொகை மூலமும் பழையவுரையும்.* உ.வே.சா. நூல் வெளியீடு, 2009.

[4.] **சுப்பிரமணியன், ந.** *சங்ககால வாழ்வியல்.* 1-ஆம் பதிப்பு, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்., 1986.

[5.] **திலகவதி, க.** *சங்ககால மகளிர் வாழ்வியல்.* 1-ஆம் பதிப்பு, இறையருள் பதிப்பகம், 2001.

[6.] **மாணிக்கம், வ. சுப.** *தமிழ்க்காதல்.* 1-ஆம் பதிப்பு, மெய்யப்பன் தமிழாய்வகம், 2002.

[7.] **வேங்கடசாமி நாட்டார், ந. மு.** *அகநானூறு.* சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,